பேட்டரி மூலம் இயங்கும் எலக்ட்ரிக் வாகனங்களுக்கு 100 சதவீத வரி விலக்கு: தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ.3

பேட்டரி மூலம் இயங்கும் எலக்ட்ரிக் வாகனங்களுக்கு 100 சதவீத வரி விலக்கு அளித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு எலக்ட்ரிக் வாகனங்கள் கொள்கை கடந்த 2019ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன்படி பேட்டரியில் இயங்கும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வாழ்நாள் வரியில் 50 சதவீதம் சலுகை அளிக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அரசுக்கு போக்குவரத்து கமிஷனர் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதில், பேட்டரியில் இயங்கும் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத எலக்ட்ரிக் வாகனங்களுக்கு 2022ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதி வரை 100 சதவீத வரி விலக்கு அளித்து அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

அதன் அடிப்படையில், அவரது கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து, அனைத்து எலக்ட்ரிக் வாகனங்களுக்கும் 31.12.2022 வரை வரி வசூலிக்கும் உத்தரவை நிறுத்திவைத்து அரசு உத்தரவிடுகிறது. அதன்படி, அந்த வாகனங்களுக்கு 100 சதவீத வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

மாவட்ட கலெக்டர்களுடன் நாளை தலைமைச்செயலாளர் ஆலோசனை

சென்னை, நவ.3–

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பற்றி அனைத்து மாவட்ட கலெக்டர்களுடன், தலைமைச்செயலாளர் கே.சண்முகம் தலைமைச் செயலகத்தில் நாளை ஆலோசனை மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பற்றி தலைமைச்செயலாளர் கே.சண்முகம் தொடர்ந்து மாவட்ட கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

அந்த வகையில் நாளை (புதன்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு, தலைமைச்செயலகத்தில் காணொலி காட்சி மூலம் அனைத்து மாவட்ட கலெக்டர்களுடனும் தலைமைச்செயலாளர் கே.சண்முகம் ஆலோசனை நடத்துகிறார்.

இந்த கூட்டத்தில், கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், குடியிருப்பு பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஒழுங்கு படுத்துவது, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தினருக்கான காப்பீடு, ஊரக வீட்டுவசதி மற்றும் பழங்குடியினருக்கான வீட்டுவசதி, ஆன்லைன் பட்டா ஆகியவை குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

உருளைக்கிழங்கு விலையும் உயருகிறது

சென்னை, நவ.3

வெங்காயத்தை தொடர்ந்து உருளைக்கிழங்கு விலையும் உயர்ந்து வருகிறது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கு சில்லரை விலையாக ரூ.30 முதல் ரூ.45 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அது தற்போது ரூ.60 முதல் ரூ.70 வரை உயர்ந்துவிட்டது. மத்தியபிரதேசம், உத்தர பிரதேசம், பெங்களூரு உள்ளிட்ட இடங்களிலிருந்தும் தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானலில் இருந்தும் உருளைக்கிழங்கு கோயம்பேடு மார்க்கெட்டுக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு 25 முதல் 30 லாரிகளில் வருவது வழக்கம். ஆனால் தற்போது 15 லாரிகளில் மட்டும் தான் உருளைக்கிழங்கு வருவதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

Notice

Notice is hereby given that the share certificate for 2420 Equity Shares under Folio No. 13772, Certificate No. S013772 bearing distinctive number 458724861-458727280 of Ashok Leyland Limited standing in the name of Rachita Garg have been lost or mislaid and the undersigned have applied to the Company to issue duplicate share certificates for the aforesaid shares. Any person who has a claim in respect of the said shares should lodge such claim with the Company at its registered office 1, Sardar Patel Road, Guindy, Chennai, Tamil Nadu, 600032 within 7 days from this date else the Company will proceed to issue duplicate certificates.

Date ; 03.11.2020
Place; Chennai
Rachita Kartik Gupta

டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், அஞ்சல் கள்ளக்குடி–621 651, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு.
CIN: L24297TN1973PLC006372
Tel: +91-11-23457100 Email: sncci@dalmiarf.com
Website: www.dalmiarefractories.com

அறிவிப்பு

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 மற்றும் 47ன்படி, 30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டம் புதன்கிழமை, 11 நவம்பர், 2020 அன்று நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.dalmiarefractories.com மற்றும் மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளம் www.msei.inலும் உள்ளது.

டால்மியா ரீப்ராக்டரீஸ் லிமிடெட்டுக்காக
(அகான்ஷா ஜெயின்)
கம்பெனி செயலாளர்
Memb. No. A36766

தேதி: 02.11.2020
இடம்: புதுடெல்லி

எடப்பாடி பழனிசாமி உத்தரவு

ஆழியாறு, வரதமாநதி அணையில் இருந்து 6–ந் தேதி தண்ணீர் திறப்பு

கோவை, திண்டுக்கல் மாவட்டங்களில் 11,923 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்

சென்னை, அக்.3–

ஆழியாறு, வரதமாநதி அணைகளில் இருந்து பாசனத்திற்கு 6–ந் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியாறு பழைய ஆயக்கட்டு இரண்டாம் போக பாசனத்திற்கு ஆழியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடக் கோரி ஆனைமலை வட்டார ஆழியாறு பழைய ஆயக்கட்டு விவசாயிகள் நலச்சங்கம் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியாறு பழைய ஐந்து வாய்க்கால்களின் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் இரண்டாம்போக பாசனத்திற்கு 6.11.2020 முதல் 15.4.2021 முடிய 160 நாட்களுக்கு, ஆழியாறு அணையிலிருந்து 1137 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டத்தில் உள்ள 6,400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதமாநதி அணைமுதலமைச்சர் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வரதமாநதி அணையிலிருந்து, பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, வரதமாநதி அணையிலிருந்து பாசனத்திற்காக 6.11.2020 முதல் 120 நாட்களுக்கு பழனி வட்டம், பாப்பன்கால்வாய், பெரிய வாய்க்கால், பழனி வாய்க்கால் மற்றும் 18 பாசன குளங்களின் பாசன வசதிக்காக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 5,523.18 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அமைச்சர் துரைக்கண்ணு மறைவு

பாபநாசம் தொகுதி காலியானது: சபாநாயகர் ப.தனபால் அறிவிப்பு

சென்னை, நவ.3

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் இரா.துரைக்கண்ணு கடந்த அக்டோபர் 31ந்தேதி நள்ளிரவில் காலமானார். அவர் தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தார். அவர் மறைவைத் தொடர்ந்து, பாபநாசம் தொகுதி காலியாகிவிட்டது. அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பாணையை சபாநாயகர் ப.தனபால் நேற்று வெளியிட்டார்.

தமிழகத்தில் இத்துடன் 4 தொகுதிகள் காலியாக உள்ளன.

கடந்த பிப்ரவரி மாதம் திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. கே.பி.பி.சாமி, குடியாத்தம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. காத்தவராயன் ஆகியோர் மரணம் அடைந்தனர். அதைத் தொடர்ந்து 2 தொகுதிகளும் காலியானதாக அறிவிக்கப்பட்டன. காலியாக அறிவிக்கப்பட்ட 6 மாதங்களுக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், கொரோனா பரவலை காரணம் காட்டி இந்த இடைத்தேர்தலை தற்போது நடத்த முடியாத சூழல் உள்ளதாக இந்திய தேர்தல் கமிஷனுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியது. அதை இந்திய தேர்தல் கமிஷன் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் கடந்த ஜூன் மாதம் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெ.அன்பழகன் மரணம் அடைந்தார். அந்தத் தொகுதியும் காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் 6 மாதம் முடிவடையாத சூழ்நிலை உள்ளது. எனவே அந்த நேரத்தில்தான் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்துவது குறித்து அறிவிக்கப்படும்.

இன்னும் 5 மாதங்களுக்குள் சட்டமன்ற பொதுத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கான சூழ்நிலை இருப்பதால், பாபநாசம் தொகுதி காலியாக அறிவிக்கப்பட்டாலும், அங்கு இடைத்தேர்தல் நடத்த வாய்ப்பு இல்லை.

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்காக 9.48 லட்சம் விண்ணப்பங்கள் தாக்கல்

தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தகவல்

சென்னை, நவ.3

வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்காக தமிழகம் முழுவதும் 9 லட்சத்து 48 ஆயிரம் பேர் விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழக வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக வாக்காளர்களிடம் இருந்து தொடர்ந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த பிப்ரவரி 14ந்தேதியில் இருந்து இம்மாதம் நவம்பர் 1ந் தேதி வரை (நேற்று முன்தினம்) 9 லட்சத்து 48 ஆயிரத்து 521 விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன.

அவற்றில் 4.06 லட்சம் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலமாகவும், 5.42 லட்சம் விண்ணப்பங்கள் நேரடியாகவும் பெறப்பட்டன. பெயர் சேர்ப்புக்காக மட்டும் 2 லட்சத்து 44 ஆயிரத்து 808 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

இறந்தவர் பெயர் நீக்கம் மற்றும் வாக்காளர் ஒருவரின் பெயர் ஒன்றிற்கும் மேற்பட்ட இடங்களில் இருந்தால் அவற்றையும் நீக்குவதற்காக 4.88 லட்சம் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு உள்ளன. திருத்தங்களுக்காக 1.82 லட்சம் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன.

இம்மாதம் 1ந் தேதி நிலவரப்படி தமிழகத்தில் 80 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 9 லட்சத்து 22 ஆயிரத்து 166 ஆகும். அவர்களின் ஆண்கள் 4.52 லட்சம், பெண்கள் 4.70 லட்சமாகும். 22 பேர் மூன்றாம் பாலினத்தவர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 80 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்து 421 ஆகவும், சென்னை மாவட்டத்தில் 78 ஆயிரத்து 618 ஆகவும், காஞ்சீபுரம் மாவட்டத்தில் 53 ஆயிரத்து 329 ஆகவும் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas
Equitas Small Finance Bank

CIN: U65191TN1993PLC025280
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitasbank.com | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, செப்டம்பர் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, நவம்பர் 9, 2020 திங்கட்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளம் www.equitasbank.com மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டுக்காக
சம்பத்குமார் கே ஆர்,
நிறுவன செயலர்

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 02, 2020

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை, தருமபுரி மாவட்டச் செயலாளரும், உயர் கல்வித் துறை அமைச்சருமான கே.பி. அன்பழகன் தனக்கு கூடுதலாக வேளாண்மைத் துறை அளிக்கப்பட்டதையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

என்ஜினீயரிங் மாணவர்களுக்கான துணை கலந்தாய்வு: 7–ந்தேதி வரை விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, நவ. 3–

தமிழ்நாடு பொறியியல் பி.இ./பி.டெக்., மாணாக்கர்கள் சேர்க்கை 2020–21 பொதுகலந்தாய்வு முடிவில் நிரப்பப்படாமல் உள்ள இடங்களுக்கு,துணைகலந்தாய்வுக்கு இன்று முதல் 7–ந்தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சிறப்பு துணை தேர்வில் தேர்ச்சி பெற்ற 12ம் வகுப்பு பொது மற்றும் தொழிற்கல்வி பயின்ற தகுதி வாய்ந்த தமிழ்நாட்டை சார்ந்த மாணாக்கர்கள் மற்றும் பொதுக்கலந்தாய்வில் பங்கேற்க இயலாத மாணாக்கர்களும் இந்த துணைக்கலந்தாய்வில் கலந்து கொண்டு இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உள்ளடக்கிய 52 பொறியியல் சேர்க்கை உதவி மையங்கள் மாணாக்கர்களுக்கு இணைய தளம் மூலம் பதிவு செய்ய வழிகாட்டுதல் வழங்கப்படும். மாணாக்கர்கள் விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக இன்று (3–ந்தேதி) முதல் 7–ந்தேதி வரை பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை, தென் சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள, கழக அமைப்புச் செயலாளர் ஆதிராஜாராம் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே.மார்க், மகாலட்சுமி, மும்பை 400 034.
CIN: L65990TN2005PLC071791
Tel.: +91 22 6660 1100 • Fax: +91 22 2354 4789
Email id: eslinvestors@essar.com • Web: www.essar.com

அறிவிப்பு

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, செப்டம்பர் 30, 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, நவம்பர் 11, 2020 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– ரச்சனா H திரிவேதி
கம்பெனி செயலாளர்

தேதி: அக்டோபர் 29, 2020
இடம்: மும்பை

SUNDARAM FINANCE HOLDINGS

30 செப்டம்பர் 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ இலட்சங்களில்)

விவரங்கள்	தனித்தது						ஒருங்கிணைக்கப்பட்டது					
	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த அரையாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த அரையாண்டு		முடிவடைந்த ஆண்டு
	செப்டம்பர் 30, 2020	ஜூன் 30, 2020	செப்டம்பர் 30, 2019	செப்டம்பர் 30, 2020	செப்டம்பர் 30, 2019	மார்ச் 31, 2020	செப்டம்பர் 30, 2020	ஜூன் 30, 2020	செப்டம்பர் 30, 2019	செப்டம்பர் 30, 2020	செப்டம்பர் 30, 2019	மார்ச் 31, 2020
	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம்	977.07	883.90	2134.25	1860.97	3640.77	9247.95	1263.04	1511.41	2381.84	2774.45	3813.37	9255.61
வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	415.58	301.09	1417.74	716.67	2269.46	6511.76	156.28	324.94	877.63	481.23	771.23	3477.44
வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	378.01	284.78	1278.69	662.79	2159.53	6138.87	1929.26	(988.64)	2132.62	940.65	3223.20	7813.49
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	(7445.66)	(10552.27)	(15872.75)	(17997.93)	(31169.59)	(48382.61)	(6194.20)	(12368.23)	(14665.07)	(18562.41)	(30068.27)	(46281.33)
சமபங்கு மூலதனம்	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19	7555.19
ரிசர்வுகள் மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக						116500.67						178171.08
அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS (முக மதிப்பு ₹ 5/- ஒவ்வொரு பங்கிற்கும்)	0.25	0.19	0.85	0.44	1.43	4.06	1.28	(0.65)	1.41	0.62	2.13	5.17

மேற்கண்ட முடிவுகளில் எந்தவொரு அசாதாரண இனங்களும் சேர்க்கப்படவில்லை.

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL : www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramholdings.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. உலகம் முழுவதிலும் மற்றும் இந்தியாவிலும் பரவியுள்ள கொரோனா வைரஸ் நோய் (COVID-19) பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க இடையூறு மற்றும் மந்தநிலையை ஏற்படுத்தி வருகிறது. சர்வதேச தொற்று நோய் பரவல் மற்றும் அதன் காரணமாக அரசு கொண்டு வந்த ஊரடங்கின் விளைவாக எங்கள் இணை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்களின் வணிகத்தில் ஏற்பட்ட பாதிப்பு நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. சர்வதேச தொற்று நோயின் மாறும் தன்மை மற்றும் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எதிர்கால பொருளாதார நிலைமைகளின் மாற்றங்களை தொடர்ந்து கண்காணித்து தகுந்த இடர் குறைப்பு நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொள்ளும்.
3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகளுக்கு நவம்பர் 2, 2020 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குநர் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சென்னை
02.11.2020

போர்டின் உத்தரவுப்படி
டி. டி. ஸ்ரீனிவாசராகவன்
தலைமை இயக்குநர்

சுந்தரம் பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

CIN: L65100TN1993PLC025996
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641
Email: investorservices@sundaramholdings.in Website : www.sundaramholdings.in